1970 பிப்ரவரி 28]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட முடிவு எதுவும் செய்யப்படவில்லை.

பவளம் வெட்டி எடுத்தல்

*144 வினா. **திரு. ஏ. எம். இராஜா :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பவளம் வெட்டி எடுக்கப்படுகின்றதா?

(இ) ஆம் எனில், 1967-69-ம் ஆண்டுகளில் ஆண்டுக்கு எவ்வளவு எடுக்கப்பட்டது ? ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை, ஐயா.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

Distribution of cloth to Khadi Board employees

*145 Q.—THIRU K. SAHADEVA KANDER : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether free cloth distribution has to be made to the employees of the Tamil Nadu Khadi Board this year; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) & (இ) தமிழ்நாடு கதர் வாரியம், காந்தி நூற்றாண்டு விழா, தீபாவளிப் பண்டிகையின் போது, கதர் விற்பனையை அதிகரிக்கவும், குறிக்கோள் அளவாகிய ரூ. 2 கோடி விற்பனை அளவை எய்தவும், ஊக்கமளிக்கும் வகையில், 1969-ம் ஆண்டு தீபாவளியின்போது கதர் வாரியத்தின் அரசிதழ் பதிவு பெறாத பணியாளர்கள் (சில்லறை நிதியிலிருந்து ஊதியம் பெறும் ஊழியர்கள் உட்பட) ஒவ்வொருவருக்கும் ரூ. 25 மதிப்புக்கு மேற்படாத கதர் துணிகள் இலவசமாக வழங்கத் தீர்மானித்தது. அதன்படி 1969-ம் ஆண்டு, தீபாவளியின்போது ரூ. 86,450 பெறுமானமுள்ள கதர்த் துணிகள் 3,458 பணியாளர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன.

திரு. கே. சகாதேவக் கண்டர்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைப் பொங்கல் தினத்தன்றும் செயல்படுத்த, இலவசமாகக் கதர் வழங்க சர்க்கார் பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, காந்தியார் நூற்றாண்டு விழாவையொட்டியும், வள்ளுவர் ஈராயிரம் ஆண்டு விழாவையொட்டியும், மறைந்த பேறிஞர் அண்ணா அவர்களின் 60-ம் ஆண்டு நிறைவு விழாவையொட்டியும் விசேஷமான முறையில் இலவசக் கதர்த் துணிகள் வழங்கப்பட்டனவே தவிர, ஒவ்வொரு தீபாவளி, பொங்கல் பண்டிகையின்போதும் வழங்கப்படும் திட்டம் அல்ல இது.